**இந்தியத் துணைத் தூதரகம்**
**யாழ்ப்பாணம்**
*** * ***

**ஊடக அறிக்கை**

## இந்தியாவின் 80 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டம் – 2026

1. யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம் இந்தியாவின் 80 ஆவது சுதந்திர தினத்தை 2026 ஆகஸ்ட் 15 ஆம் திகதி மிகுந்த உற்சாகத்துடனும் தேசப்பற்றுடனும் கொண்டாடியது.

2. கொண்டாட்ட நிகழ்வுகள் யாழ்ப்பாணம் பலாலியில் அமைந்துள்ள இந்திய அமைதி காக்கும் படையினர் நினைவிடத்தில் இந்தியத் துணைத் தூதுவர் திரு. சாய் முரளி அவர்கள் மற்றும் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் மலரஞ்சலி செலுத்தியதுடன் ஆரம்பமானது.

3. இதனைத் தொடர்ந்து இந்திய இல்லத்தில் இந்தியத் தேசியக் கொடி சம்பிரதாயபூர்வமாக ஏற்றப்பட்டதுடன் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் மற்றும் இந்திய சமூகத்தினரால் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. இந்தியாவின் சுதந்திர தினத்தை முன்னிட்டு மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் நாட்டுக்கு மக்களுக்கு ஆற்றிய உரையின் முக்கியப் பகுதிகள் வாசிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து இந்தியத் துணைத் தூதுவர் அவர்களும் உரையாற்றினார்

4. நிகழ்வில் தேசப்பற்றுடன் கூடிய கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. 150 ஆவது ஆண்டை நிறைவு செய்யும் “வந்தே மாதரம்” பாடல் இந்தியா கார்னர் மாணவர்களால் பாடப்பட்டது. இதனைத் தொடர்ந்து சென்னை இந்தியாவைச் சேர்ந்த கலா அங்குரம் குழுவினரால் பரதநாட்டிய மற்றும் அரைசெவ்வியல் நடன நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டன. மேலும் இந்தியத் துணைத் தூதரகப் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரால் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டன.

5. இந்நிகழ்வில் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர், இந்தியப் பிரஜைகள், இந்திய வம்சாவளியினர் மற்றும் இந்தியாவின் நண்பர்கள் உள்ளிட்ட 150 க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

6. நிகழ்வின் சில பிரதிநிதித்துவப் புகைப்படங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம்
15 ஆகஸ்ட் 2026